# தேவதாயின் குரல்

'இறுதியில் எனது மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்'

FOR PRIVATE CIRCULATION ONLY

குரல் 28 யாழ்ப்பாணம் மார்ச் 1999




## யூபிலிகளும் யூபிலியும்

எம் உலகம் தீப்பற்றி எரிகிறது. ஒவ்வொருவரும் தாம்தாம் தப்பப் பார்க்கின்றனர். தன் உடன் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஓடுகின்றனர். கணத்துக்குக் கணம் தொடர்பின்றி ஒரு செயலுடன் அடுத்த செயல் தொடர்பற்றதாக மாறிவிட்டது.

நாம் வாழும் கலாச்சாரம் துண்டாடப்பட்டதொன்று. அதன் வெட்டுண்ட பல துண்டங்களுக்கிடையில் தொடர்பு இல்லை. அது ஒரு சிறைச்சாலை போன்றது. அதில் அதுதான் இருக்கிறது. அதற்கு மாற்று மருந்தொன்றில்லை.

இதுவே இன்றைய உலகமயமாக்கல் கலாச்சாரம். இதில் உள்ளதெல்லாம் அவா, எல்லையற்ற பேராசை இதுவே நரகம். அதன் முன்சுவை இதற்கு பதிலாக, மாற்றாக எங்கள் யேசுவின் தந்தை எமக்குத் தரும் மாற்றுலகு எது?

முதலில் தன் வீட்டின் மாளிகைத் தோட்டங்களின் வனப்பை இவ்வுலகின் வரண்ட பாலைவனங்களுக்குப் பதிலாக தருகிறார். பசுமை நிறைந்த நந்தவனங்கள் இங்கு ஆரம்பமாகி, அங்கும் வளரும்.

அதுவே பிதா தரும் தரிசனத்தின் அடிவானம். இவ்வுலகு தருவது மாயை நிறைந்த கானல் காட்சிகளையே. யேசு தரும் நம்பிக்கை பிதாவின் லில்லி புஸ்பங்களும் வானத்துப் பறவைகளின் அழகிய வானவில் வர்ணப் போர்வைகளும். இதற்குள் நுளைய 1999ம் ஆண்டு அழைக்கிறது.

அப்பா என இயேசு அன்புடன் அழைத்த இறை தந்தையின் ஆண்டு 1999. மூன்றாம் மிலேனியத்திற்கு முன்வரும் 365 நாட்களைக் கொண்ட இறுதி வருடம். அப்பாவின் ஏழைக் குழந்தைகட்கு அவர் அருள் தரும் மிலேனியமாகலாம்.

இதை யேசு 'விடுதலையுகம் ஆரம்பித்துவிட்டது. இந்த அருள்தரும் ஆண்டில் அப்பாவின் ஆவி என் மேலே. 3ம் மிலேனிய ஏழைகட்கு ஓர் நற்செய்தி முழங்கவும், 3ம் மிலேனிய சிறையுற்றோருக்கு விடுதலை 3ம் மிலேனிய ஒடுக்கப்பட்டோருக்கும், பார்வை தவறியோருக்கும் நம்பிக்கை இழந்தோருக்கும் ஓர் அருள் தரும் ஆண்டை அறிவிக்கவும் (காண் — லூக் 4:18-19) என்னை அனுப்பினார் என்றார்.

ஏட்டோடு நிற்க வேண்டாம், மக்களோடு நடவுங்கள், கலவுங்கள், கண்ணீர் வடியுங்கள்'



மகா ஞானவொடுக்கத்துக்கு ஆயுத்தமாக ஐந்து போதகர்கள் கிராம மக்களிடையே நடக்கத் தொடங்கவுள்ளனர். அறை கூவினால் வியப்பு...... பின் வெறுப்பு...... பின் கல்வாரிமலையின் முன் குறிபோன்ற நசரேத்தின் மலை உச்சி... அப்படி இலகுவாக கீழே தள்ள முடியாது. ஏனெனில் பலருக்கு தபோர் மலையின் பரவசமே விருப்பம்.

'இவற்றைக் கேட்டுச் செபக் கூடத்தில் இருந்த அனைவரும் வெகுண்டெழுந்து அவரை ஊருக்கு வெளியே அமைந்திருந்த மலை உச்சியிலிருந்து கீழே தள்ளி விடக் கொண்டு சென்றனர். அவரோ அவர்களிடையே நடந்து தம்வழியே போனார்.
(லூக் 28 - 30)

ஆனால் கல்வாரி பிரயாணத்திற்கு ஏனைய யாழ் திருச்சபை அங்கங்கள் உதவ வேண்டும், ஊக்கம் கொடுக்க வேண்டும். இல்லாவிடில் அவர்கள் நடுவே சென்று அங்கிருந்தே போய் விடுவார் (லூக் 4:30) யேசு.

யேசுவுக்கு பாரட்டுகள் நிறைய வந்தன நசரேத்தில். சில துறவிகள் யாழ்ப்பாணத்தில் கொண்டாடும் தங்கள் யூபிலிகள் போல.

மக்கள் மரணத்தைக் கொண்டாடுகின்றனர், தம் பயங்களைக் கொண்டாடுகின்றனர், களியாட்டங்கள் ஊடாக பயத்தை மறைக்க முயலுகின்றனர். இவர்களுக்கு என்ன அவசரம்? ஒவ்வொரு கிழமையும் ஒவ்வொரு யூபிலி, பணச் செலவு, ஆரவாரம். வெளிநாட்டுப் பணமா? வன்னிக்கு அனுப்ப முடியாதா? என்று பலர் மனதில் பலவித எதிரொலிகள்.)

ஒரு யூபிலிதான் உண்டு. யேசு தனது சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் அதைக் கொண்டாடியுள்ளார்.

வரும் மிலேனியம் மார்க்கசீயவாதிகள் கண்ணோட்டத்தில் உலக முதலாளித்துவத்தின் மிலேனியம். கலைஞர் சிலருக்கு இப் பூமி ஆதாம் ஏவா

(8ம் பக்கம் பார்க்க)

“ நாங்கள் அவனை அன்பு செய்வோம் ”

# மூளை வளர்ச்சி குன்றிய ஒரு செல்வன்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபதாம் ஆண்டு நவம்பர் மாதம் இருபதாம் நாள். பாரிஸ் நகரின் எல்லையில் அமைந்திருந்த குழந்தைப்பேற்று மருத்துவமனையில் ஒரு கத்தோலிக்க அன்னை ஆண் மகவொன்றை பிரசவித்தாள். அம் மகவுக்குத் திருமுழுக்கின் போது இம்மானுவல் எனப் பெயரிடப்பட்டது.

குழந்தையின் தந்தையார் பெரு மகிழ்வுடன் இம்மானுவலின் அண்ணாவின்சென்ற், அக்கா ஆன் ஆகிய இருவரையும் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். தங்கள் சின்னத்தம்பியைக் கண்டு மிகுந்த அக்களிப்புக் கொண்டனர் அச் சிறுவர்கள்.

இம்மானுவலின் வரவு அவனது குடும்பத்தில் பெரும் குதூகலத்தை உருவாக்கியது. குழந்தையின் தாத்தாக்கள், பாட்டிகளும், மாமன்கள், மாமிகளும் மற்றும் அக் குடும்பத்தின் நெருங்கிய உறவினர் அனைவருமே மகிழ்ச்சியில் திளைத்தனர்.

ஆயின் அம் மகிழ்ச்சி அதிக நாள் நீடிக்கவில்லை. மூன்றாம் நாள் குழந்தையின் தந்தை வழக்கம்போல் மருத்துவமனைக்கு அழகிய மலர்க் கொத்து ஒன்றுடன் சென்ற போது தன் அன்புமனைவியின் முகபாவனையைக் கண்டு திடுக்கிட்டார். ஆம் அவளது முகம் அதிர்ச்சியடைந்ததாக தோற்றமளித்தது.

தன் கைகளை கணவனிடம் இரக்கத்துடன் நீட்டினாள். “எங்கள் குழந்தை ஏனைய குழந்தைகளைப் போல் இல்லை. அசைவாட்டம் இன்றிக் கிடக்கிறான். அவனிடம் உணர்ச்சி இல்லை, இதுவரை அழவேயில்லை. துடிதுடிப்பின்றி, குழப்படிகளின்றி பேசாமல் கிடக்கிறான் என அழுது கொண்டே கூறினாள்.

தந்தை துணைவியை அணைத்துக் கொண்டார், ஆறுதல் கூறினார். குழந்தையையும் பொறுமையுடன் நீண்ட நேரம் உற்றுநோக்கினார். மனைவி கூறுவதில் உண்மை இருப்பதாக உணர்ந்தார்.

அடுத்த நாள் அத் தம்பதிகள் இம்மானுவேலை ஒரு குழந்தை மருத்துவ நிபுணரிடம் எடுத்துச் சென்றனர். அம் மருத்துவ நிபுணர் நீண்ட நேரமாக பொறுமையுடன் அக் குழந்தையைப் பரிசோதித்தார். பின்னர் வெகு இரக்கத்துடனும், அன்புடனும் குழந்தையின் பெற்றோரிடம் உரையாடினார்.

இம்மானுவேல் ஒரு ‘மூளைவளர்ச்சி குறைந்த” அதாவது “மொங்கோலியன்” குழந்தை. ஏனைய குழந்தைகளைப் போல் துடியாட்டத்துடன் சுகதேகியாக இருக்க காலம் எடுக்கும். அவன்மட்டில் அதிக அன்பும், கருணையும், இரக்கமும் காட்ட வேண்டும். இதற்கு உங்களிருவருக்கும் மிகுந்த பொறுமை தேவை.

இம்மானுவலின் தந்தை மிகுந்த முகவாட்டத்துடன் வீட்டுக்கு வந்தார். அவரது அகத்திலிருந்த கவலை முகத்தில் தெரிந்தது. வீட்டிலுள்ளோர் மிகுந்த அக்கறையோடு இம்மானுவலின் நிலையை அறிந்தனர். அவர்களெல்லோரும் ஒரே மனத்தினராய் “நாங்கள் அவனைப் புறக்கணிக்க மாட்டோம், அதிகமாக அன்பு செய்வோம் எனக் கூறினர். இம்மானுவேலின் அண்ணனும் அக்காவும் அதே வார்த்தைகளையே மொழிந்தனர்.

“நாங்கள் அவனை அன்பு செய்வோம்” இந்த மாய உலகிலே கூறப்படும். ஒரு அற்புதமான வார்த்தை, சாதாரணமாக ஒரு வலது குறைந்த பிள்ளையை பெற்றோரோ, சகோதரரோ, உற்றார் உறவினரோ அன்பு செய்வது, ஆதரிப்பது, பாசத்தோடு பராமரிப்பது அருமையில் அருமை.

மனிதாபிமானத்தோடு சமூகம் இவ்வித வலது குறைந்தவர்களை – அங்கவீனர்களை நோக்க வேண்டும். அவர்களோ அவர்களது பெற்றோரோ செய்த குற்றங்கட்குத் தண்டனையாக இவ்விதம் படைக்கப்படவில்லை என இயேசு கூறுவதை நாம் உணர வேண்டும் என தமது திருமடலொன்றில் 2ம் அருள் சின்னப்பர் கூறுகிறார். (Evan gelium Vita 12)

மேலும் அவர் கூறுவதாவது:- வேதாகமத்தின் முதல் நூலிலேயே இது உறுதிப்படுத்தப்படுகின்றது. ‘நமது சாயலாகவும் பாவனையாக, வும் மனிதனைப் படைப்போமாக” (ஆதி 1:26) என்ற வார்த்தைகளால் இறைவன் மானிட படைப்பில் எந்த வித வேறுபாட்டையும் மனதில் கொள்ளவில்லை. மனிதன் மிக உயர்ந்த பண்பு கொண்ட படைப்பு. எனவே மனித இனம் அனைத்தும் சமம். சகோதரத்துவத்தோடு ஏனையோருடன் மனிதாபிமானத்தோடு உறவாடுவது, அன்பு செய்வதே இறைவனால் விரும்பப்படுவது”

இம்மானுவலை அன்பு செய்வது என அக் குழந்தையின் பெற்றோர் முடிவு செய்தாலும் அது இலகுவாகவோ அல்லது சகிக்கக் கூடியதாகவோ இருக்கவில்லை. தங்கள் இரு குழந்தைகளையும் வளர்த்தெடுத்ததை விட அதிக சிரமங்களையும், பொறுமையையும், சகிப்புத் தன்மையையும் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு நடவடிக்கையையும் ஒவ்வொரு செயலையும் இம்மானுவல் பழகிக்கொள்ள நீண்ட காலம் எடுத்தது. எனினும் பெற்றோர் மனந் தளரவில்லை.

1976 ஜனவரி 30 இம்மானுவலுக்கு காய்ச்சல் நோய் தொடங்கியது. எவ்வித சிகிச்சைகட்கும் குணமடையாத நிலையில் பாரீஸ் நகரின் புகழ்பெற்ற ‘சல்பெற்றியர்’ மருத்துவமனைக்கு மார்ச் 17ல் கொண்டு செல்லப்பட்டான். அவனுக்கு குருதிப்புற்று நோய் பீடித்திருப்பதாக பல்வேறு ஆய்வுகளின் பின் அறியப்பட்டது.

தொடர்ந்து மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அடிக்கடி இம்மானுவல் கொண்டு செல்லப்பட்டான். எனினும் பெற்றாரோ மனம் சளைக்கவில்லை. பொறுமை இழக்கவில்லை இம்மானுவேலும் அனைத்துத் துன்பங்களையும் ஆண்டவருக்காக ஏற்றுக் கொள்ளப் பழகிவிட்டான்.

ஞாயிற்றுக்கிழமைகளில் அன்னையோடு ஆலயம் செல்லும் இம்மானுவல் தாயார் நற்கருணை வாங்குவதை ஆசையோடு பார்ப்பான். எனக்கு எப்போது? என்று விருப்பத்தோடு கேட்பான். திவ்விய நற்கருணையில் எழுந்தருளியிருக்கும் யேசுவைப் பற்றி நன்கு அறியத் தொடங்கினான்.

[3 பக்கம் பார்க்க]

# 3ம் மிலேனியத்தில் தோன்றப்போகும் புதிய உலக அமைப்பு

1ம், 2ம் உலகப் போர்கள் முடிவடைந்து, 3ம் உலக குளிர்ப் போரும் (Cold war) ஒரு முடிவுக்கு வந்து 4ம் உலகப் போர் ஆரம்பித்துள்ளது. இப்போர் வித்தியாசமானது. முழு உலகையும் சந்தைகளினூடாக அடக்குவதே குறிக்கோள்.

ஆக்கிரமிப்பாளர்களினால் பாவிக்கப்படும் ஆயுதம், பணம். இருந்தும் இது மக்களை மில்லியன் கணக்கில் ஒவ்வொரு கணமும் கொல்லும், அங்கவீனராக்கும். தம் பண உலகின் ஆதிக்கத்தை பெருக்கும் நோக்கோடு கண்ணுக்குப் புலப்படாத, உலகளாவிய சந்தை மையங்களிலிருந்து அவர்கள் ஆளுவர்.

அவர்கட்கு தம் பண அதிகாரிப்பை தவிர வேறு கட்டுப்பாடுகள் கிடையாது போகும். இதனால் ஒவ்வொரு பத்துக்கும் ஒன்பது பேர் (ஆண்களும் பெண்களும்) இவ்வுலகில் பொருந்த முடியாத உடைந்த வாழ்க்கையினையே வாழ்வர்.

இவற்றால் அறிய வேண்டிய சில உண்மைகள்:

**1ம் உண்மை:-** உலக பொருளாதாரச் சந்தையும், பணமும் வெகு சொற்ப நபர்களின் கையில் வந்தடையும்; குவியும். ஏனைய மனித கும்பல்கள் நம்ப இயலாத பயங்கர வறுமைக்குள் வாழும்.

**2ம் உண்மை:-** புதிய அமைப்பு மனித மதிநுட்பம் அமைப்பு, நவீனப்படுத்தப்பட்ட மனித ஆற்றல்களின் உயர் நிலை என விவரிக்கப்படும். உண்மையாக பெருவாரியான மனிதர், தொழிற் புரட்சிக்கு முன்பிருந்த காட்டுமிராண்டு வாழ்கை நிலைகளுக்குத் திரும்பி வரவேண்டி வரும். இதைத் தடுக்க ஒழுக்கவியல் கோட்பாடுகளோ, மனசாட்சியின் தடைகளோ இல்லாது போய் விடும். இவ்வமைப்பு சர்வாதிகாரப் போக்கும் ஆவேசமும் கொண்டதாக, எவ்வித அரச கட்டுப்பாடுகளுக்கும் அடி பணியாததாக இருக்கும். ஏனெனில் அதன் பணச் சங்கிலிகளிலேயே அவை கட்டுப்பட்டுக் கிடக்கின்றன. இதன் இன்றைய நிலையை நோக்கின் 100 மில்லியன் குழந்தைகள் உலக நகர்களின் தெருக்களில் அநாதைகளாக வாழ்கின்றனர். 200 மில்லியன் மனிதர்கள் உலக தொழிலாளர் பட்டியலில் பட்டினி நிலையை எதிர்நோக்குகின்றனர்.

**3ம் உண்மை:-** இப்புதிய அமைப்பின் கீழ் உற்பத்தியில் ஈடுபடாதவன், பொருள்களை வாங்கிக் கொண்டே இராதவன், வங்கிகளில் பணத்தைப் போட்டுக்கொண்டே இராதவன் பிரயோசனமற்றவன். எனவே பலர் தம் சொந்த மண்ணை விட்டு வெளியேறி அந்நிய மண்ணில் அலைகின்றனர். இவர்கள் தான் இடம்பெயர்ந்தோர். தம் சொந்த மண்ணிலும் வெளிநாட்டிலும் இல்லிடம் இன்றி அலைவோர். இவர்கள் தொட்டியில் எறியப்படும் வெறும் குப்பையே.

**4ம் உண்மை:-** ஏழை மக்களை உரிமைக்காக போராடும் மக்களை நசுக்க — இரு பக்கமும் வேலையில்லா இளைஞரையும் போர் யந்திரத்தில் பொருத்தி அப் போருக்கு உலக வங்கிகளையும், அவற்றின் பணத்தையும், ஆயுத வியாபாரிகளையும், உற்பத்தியையும் பாவிக்கிறது.

**5ம் நவீன உண்மை:-** உலக பண ராட்சதர்களுக்கு தம் சுதந்திரத்தை விற்று விட்டதால் அவர்கட்கு அடிபணிவதைத் தவிர வேறு வழியில்லாததால், மேடைப் பிரசாரத்தில் தொடர்பு சாதனங்களில் தம் பெலவீனத்தையும் இயலாமையையும் மறைக்க வீரம் பேசித் திட்டங்கள் தீட்டி, இனவாதம் பேசி, சமத்துவம், மனித உரிமைகள் மதிப்பு முதலியவற்றை முன்னணியில் வைத்து பின்னணியில் பண ராட்சதர்கள் கொடுக்கும் கோட்டாவை வாங்கிக் கொண்டு கொடுத்தவரின் நலன்களைப் பாதுகாத்துக் கொண்டு அவற்றிற்கு எதிரானவற்றை அடக்குவதையே தொழிலாகக் கொண்ட விஷயமறிந்த ஒரு கும்பல்.

**6ம் நவமிலேனிய உண்மை:-** இப் புதிய அமைப்புக்கு எல்லைகள் இல்லை. தூரங்கள் இல்லை. உலகின் எந்த மூலையோடும் உடன் தொடர்பு, உறவு, ஒப்பந்தம், கட்டுப்பாடற்ற உலகச் சந்தை நிபுதி ளுக்கேற்ப சுதந்திர வர்த்தக வலயங்கள் இதன் விளைவு? நாடுகள், தேசங்கள், மக்கள் பல துண்டுகளாக உடைந்து பிளவுபடும் பயங்கர நிலை.

**7ம் நவமிலேனிய உண்மை:-** இப் புதிய அமைப்புக்கெதிராக ஆயுதம் தாங்கியோ, தாங்காமலோ எதிர்ப்புக் காட்டும் குழுக்கள் — தென கிழக்கு மெக்சிக்கோவின் சம்பஸ்ரிஸ்டால் நம் மண்ணின் விடுதலைப் போர், மனிதநேயமுள்ளதாக மனித உரிமைகளை பேணுவதாக, மனித மாண்பினை சிதைக்காது காப்பாற்றுவதாயின் பண முதலைகளின் இரகசிய அங்கமாக இராது நிற்கும் குர்டிஸ் போராளிகள், கிழக்கு திமோர் மக்கள் போன்று பல. இப் பலதரப்பட்ட சிறிய எதிர்ப்புக் குழுமங்களின் பல்வேறு நிலைகளில் பொதுமையாகத் தோன்றுவது. இந்த உலக பண அமைப்புக்கு தேவையில்லாது தோன்றும் ஏழைகள் தங்களைத் தாங்களே பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வும், அடுத்தபடி அழிக்கப்படப் போகிறவர்கள் தாங்களே என்ற நெருக்கமும் ஆரம்பித்திருக்கும். நான்காவது மிலேனியப் போர் மனுக்குலத்துக்கெதிரான ஓர் சதி என்பதுமாகும். இதன் பிடியில் இன்றைய யாழ் குடாநாடு.

---

**முளை வளர்ச்சி...**

[2ம் பக்கத் தொடர்]

1978 மார்ச் 23 பெரிய வியாழனன்று இம்மானுவல் முதல்நன்மை பெற்றான். தொடர்ந்து திருப்பலி காணச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பக்தியுடன் பங்குபற்றி ஆர்வத்துடன் திவ்விய நற்கருணை பெறுவான்.

தொடர்ந்தும் இம்மானுவல் மருத்துவமனைக்கு பரிசோதனைகட்கும் சிகிச்சைக்குமாக அடிக்கடி செல்ல வேண்டியிருந்தது. நோயின் வேதனைகள் அதிகரித்தன. அவற்றை அவன் பொறுமையோடு சகித்துக் கொள்வான். அன்னை அழக்கூடாதே என்பதற்காக அவளுக்கு வேதனைகளை வெளிக்காட்ட மாட்டான்.

1983 செப்ரம்பர் 7ல் விசேட மருத்துவ நிபுணர் இம்மானுவேல் விரைவில் இவ்வுலக வாழ்விலும் வேதனைகளிலுமிருந்து விடுதலை பெறுவான் என பெற்றோருக்குத் தெரியப்படுத்தினார். அடிக்கடி திருப்பலிக்கு செல்ல முடியாதது இம்மானுவலுக்கு பெருங் கவலையைக் கொடுத்தது.

செப்ரம்பர் 27ல் வேதனைகளைத் தாங்க இயலாது முணுங்க முனகத் தொடங்கினான். 'அம்மா, அப்பா உண்மையாகவே உங்களை அதிகமாக நேசிக்கிறேன், போய் வருகிறேன். மோட்சத்தில் நாம் மீண்டும் சந்திப்போம்' எனப் பெற்றோரிடம் பிரியா விடை பெற்றான்.

"இம்மானுவல் என்றால் நம்மோடு கடவுள் என்பது பொருள். (மத் 1:23)

இச் சிறுவன் இம்மானுவலுடனும் கடவுள் இருந்தார். தன் நற்குண நற்செயல்களால் அயலவருக்கு கிறிஸ்து தன்னோடு — தான் கிறிஸ்தவன் என்பதை நன்கு காட்டியுள்ளார்.

# இந்தியாவின் சிறுபான்மை மதத்தினருக்கு எதிரான வன்முறைகள்

1988ல் சிறுபான்மை மதத்தினருக்கெதிரான வன்முறைச் செயல்கள் 25 மாநிலங்களில் பரவியுள்ளன. இவற்றில் கிறிஸ்தவ மதத்தினருக்கெதிராக எழுப்பி விடப்பட்ட வன்முறைச் சம்பவங்களே மிக அதிகமானவை. இவற்றுள் மத்திய பிரதேசத்தில் ஜபுவா என்னுமிடத்தில் நான்கு கிறிஸ்தவ கன்னியர்களின் கழுத்துகளில் வடக்கயிறு சுருக்கத் தொங்கவிடப்பட்டிருந்த நிகழ்வு மிகக் கொடூரமான வன்முறையாக அறிவிக்கப்பட்டது. இம்மாதிரியான வன்செயல்கள் அடிக்கடி இடம்பெறுவதால் கிறிஸ்தவர்கள் இரவும் பகலும் அச்ச பயத்துடனும் நிம்மதியற்ற நிலையிலும் காலம் கழிக்கும் கால கட்டம் உருவாகியுள்ளது.

## கிறிஸ்மஸ் கால வன்முறைகள்

இந்தியப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பேய் அமைதியை நிலைநாட்ட எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. வன்முறைகளைக்கண்டித்து அவர் விடுத்த அறிக்கைகளும் ஹிந்து தீவிரவாதிகளால் நிராகரிக்கப்பட்டன. குஜராத் மாநிலத்தில் டாங் பிரதேசத்தில் (1998) கிறிஸ்மஸ் தினத்தில் வன்செயல்கள் அளவுக்கு மீறிய கொடூர நிகழ்வுகளாக வெடித்தன. கிறிஸ்தவ ஆலயங்கள், கல்லூரிகள், பாடசாலைகள், மருத்துவமனைகள் மீது கொடூர தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. டாங் பிரதேசத்தில் பகலும் இரவும் பயங்கரமே தாண்டவமாடியது.

கிறிஸ்மஸ் தினத்தில் ஹிந்து தீவிரவாதிகள் பேரணியொன்றை நடத்தினர். 'ஹிந்துக்களே விழித்தெழுங்கள்' என ஒரு இலட்சியத்தை உருவாக்கினர். கிறிஸ்தவ குருக்களும், கன்னியர்களும் கல்வி, கலாச்சார சமூக, பொதுநல உதவி என்ற போர்வையில் அரச நிதிகளைக் கொள்ளையடித்து கிறிஸ்த மதப்பிரசாரம் செய்வதாகவும் ஏழை, ஹிந்துக்களுக்கு பணத்தை அள்ளியிறைத்து அவர்களை மதமாற்றம் செய்வதாகவும் கூசாது குற்றச்சாட்டுகளை இப்பேரணியின் போது அள்ளியள்ளித் தெளித்தனர்.

பேரணி மும்முரமாக ஊருராக, தெருத் தெருவாக நடைபெற்ற வேளையில் அகாவா என்ற இடத்திலுள்ள கிறிஸ்தவ ஆலயமொன்றில் நடந்த கிறிஸ்மஸ் வழிபாட்டில் பங்குபற்றிய பின் பஸ் நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்த அப்பாவிக் கிறிஸ்தவர்களை பேரணியில் கலந்து கொண்ட ஹிந்து வெறியர்கள் சரமாரியாக கற்களை எறிந்து தாக்குதல் நடத்தினர். மூவர் பயங்கர காயங்களுடன் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட ஆத்திரம் அடைந்த கிறிஸ்தவர்களும் மதவெறியர்கள் மீது கற்களை வீசினர். போலீஸ் தலையிட்டு கண்ணீர்க் குண்டுகளை வெடித்து அமைதியை நிலைநாட்டினர்.

தொடர்ந்து ஹிந்து தீவிரவாத இளைஞர் குழு ஒன்று கிறிஸ்தவர்களால் நடத்தப்படும் டீப்தர்சன் பாடசாலைக் கட்டிடங்களுக்குள் புகுந்து பாடசாலைத் தளபாடங்களை சேதப்படுத்தி உபகரணங்களை நாசமாக்கி கட்டிடங்களையும் சின்னாபின்னமாக அடித்து உடைத்து நொருக்கி அழித்தனர். போலீஸ் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

தொடர்ந்து கிறிஸ்மஸ் நள்ளிரவில் யேசு சபையினரால் நடத்தப்பட்ட ஆதிவாசி நவஜோதி உயர்தர கலாசாலை (டாங் பிரதேச சுபிர் பகுதி)யும் விடுதிச் சாலையும் கொழுத்தி எரிக்கப்பட்டன. அண்மையிலிருந்த ஒரு கிறிஸ்தவ மருத்துவமனையும் 3 ஆலயங்களும் சேதப்படுத்தப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. இந்நிகழ்வுகளில் சில யேசுசபைக் குருக்கள் படுகாயமடைந்தனர்.

இவ் வன்முறை நிகழ்வுகள் அனைத்தும் பொதுவாக ஹிந்து தேசிய தீவிரவாதிகள் அதிகமடங்கிய வடக்கு, மேற்குப் பகுதிகளிலேயே பெருமளவில் இடம்பெறுகின்றன. ஹிந்துக்கள் கிறிஸ்தவர்களாகவும் முஸ்லிம்களாகவும் மதம் மாறுவதை இவர்கள் மிகக் கடுமையாக எதிர்க்கின்றனர். இவ்விரு மதத்தினரதும் கல்வி, சமூக, மனிதநேய சேவைகளும் தன்னயம் கருதாப் பணிகளுமே இவ்வித மதமாற்றத்துக்கு ஹிந்து பாமர மக்களை கவர்ந்திழுக்கின்றன எனவும் இவர்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

இந்தியாவின் சனத்தொகை ஏறத்தாழ 95 கோடிக்கு மேலாகும். இதில் 2·5 விகிதத்தினரே கிறிஸ்தவர்கள். கிறிஸ்தவ சமூகத்தினர் மீது ஒரு மும்முனைத் தாக்குதலை ஹிந்து தீவிரவாதிகள் நடத்துகின்றனர்.

A) கிறிஸ்தவ குருக்களின் மீது நேரடித் தாக்குதல்கள், B) நற்செய்தித் தூதுரைப்பாளர் மீதும் திருவழிப்பாட்டுக் கூட்டங்களின் போதும் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படல், C) (முனிசிபல்) நகரசபைகளின் நிதி உதவியுடன் நடத்தப்படும் கிறிஸ்தவ பாடசாலைகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், ஆலய அன்பியச் செயல்கட்கான நிதிகளைக் கட்டுப்படுத்தவும் குறைக்கவும் செய்தல்.

1998 செப்ரம்பரில் ஒரு ஹிந்து தீவிரவாதக்குழு (பஜ்ராங்டால்) 'கிறிஸ்தவனே இந்தியாவை விட்டு, வெளியேறு'' என்ற இயக்கத்தை ஆரம்பித்துள்ளது.

கிறிஸ்தவர்கட்கெதிராக நடத்தப்படும் இத் தீவிரவாதச் செயல்களை கண்டித்தும், வளர்ந்து வரும் வன்முறைச் செயல்களை நிறுத்த அனைத்திந்திய ஆதரவு தேடியும் 1998 டிசம்பர் 4ல் சிறுபான்மை மதவாதிகளின் உதவியோடு இந்திய அரசுக்கும் பெருந் தலைவர்கட்கும் சமாதானம் விரும்பும் நடுநிலைமை வாதிகட்கும் விண்ணப்பங்கள் அனுப்பும் இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டது. சமாதானப் பேரணியொன்று தொடங்கப்பட்டு பாரத (இந்திய) நாட்டின் தேசிய ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும், சட்ட ஒழுங்கமைப்பையும், இனமத ஒற்றுமையையும், மத வழிபாட்டுச் சுதந்திரத்தையும் ஒருங்கே அழித்தொழிக்கும் இவ் வன்முறைச் செயல்களை கட்டுப்படுத்துமாறு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முக்கிய பிரமுகர்கட்கும் அனைத்திந்திய ரீதியில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்திய பிரதமரும், ஆளும் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவருமான வாஜ்பேய் உடனடியாக இந்த வேண்டுகோளுக்கு உத்தியோக ரீதியான உறுதியான உத்தர

[8ம் பக்கம் பார்க்க]

## தூயியும் தூளியும்

➧ ஒவ்வொரு விபூதி புதனின் போது நெற்றியில் சாம்பல் பூசி மண்ணாய் இருக்கிறோம். மண்ணுக்கே திரும்பு வோம் என அடையாளமிட்டு தியா னிக்கிறோம். விவிலியத்தில் முதல் ஆணின் பெயர் ஆதாம். இதனைத் தொடக்க நூலில் மகித படைப்பின் போது வாசிக்கின்றோம். "அடமு" என்ற எபிரேய சொல்லுக்கு மண் என்ற அர்த்தமாகும். ஆதாம் என்று குறியீட்டு சொல்லாகப் பாவிக்கப்பட் டது

➧ தமிழ் தவக்கால இலக்கியங் களுள் பசாம் என்று அழைக்கப்படும் வியாகுல பிரசங்கம் மிகவும் பழமை யானதும் பல வெகுஜன இலக்கியங் கள் தோன்ற உசாத்துணையாகவும் இருந்தது. இதை எழுதியவர் கோவை குருவான யாக்கோமே கொன்சால் வேஸ். இந்நூலை தமிழிலும் சிங்க ளத்திலும் எழுதினார். "சிரம்மத்தை பார்க்காது வசன நடையில் மட்டு மல்ல கவி நடையிலும் "பசாம்" என்ற நூலை எழுதினார். கவிதை நடை எல்லோரும் விளங்கிக் கொள் வது சிரமம்மாகையால் பல தூர இடங்களிலிருந்து கூட அதிகமான மக்களை மாதோட்டத்திற்கு வர வழைத்து தெளிவாகவும், அழகாக வும், விளக்கமாகவும் தந்தார் என்று 1730 - 1732க்கான மிஷன் அறிக்கை குறிப்பிடுகின்றது.

➧ 1730ம் ஆண்டில் இது எழுதப் பட்டது. கோவைக் குருக்களின் முக் கிய பணித் தளமாக மாதோட்டத் தில் விளங்கிய புறப்பாங் கண்டல் கிராமத்தில் முதன் முதலாக அறி முகம் செய்யப்பட்டது. இன்னமும் மக்களின் பாவிப்பிலுள்ள மிகப் பழமையான நூலாகும்.

➧ இன்று வரலாற்றில் நிலைத்துள்ள மிகவும் பழமை மிக்க பாடுகளின் காட்சி (Passion Play) ஜேர்மன் நாட்டில் ஒபுரோகாமா என்ற இடத் தில் 10 வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுகின்றது. இந்த இடம் அல்ப்ஸ் மலையடிவாரத்தில் பவே ரியா பகுதியில் உள்ளது. இது ஒரு உள்ளூர் தயாரிப்பு.



➧ ஆரம்ப கால பாடுகளின் காட்சி (Passion Play) லத்தீன் மொழியில் நற்செய்தியில் யேசுவின் பாடுகள் மத்திய காலத்தில் வாசிக்கப்பட்ட சமய நிகழ்வாகும். பின்னர் தொடர் புடைய நிகழ்வுகளான மரிய மத லேனாவின் மனமாற்றம், லசாரை உயிர்ப்பித்தது, இரவுணவு, மரியாவி கன் புலம்பல் தாய்மொழியில் புகுத் தப்பட்டது.

➧ ஜேர்மன், செக்செலவாக்கிய காட்சிகளில் சாத்தான் அறிமுகம் செய்யப்பட்டது. செல்ரிக் பிரிட்டன் பிரதேச பிரான்சிய பாரம்பரியம் அகுஸ்தினர் சபையால் உள்வாங் கப்பட்டது.

➧ 15ம் நூற்றாண்டில் பிரான்சிய விளான்டர் முறைகள் நாடக தன்மை யற்ற பாடும் முறைக்கேற்ற கவிகள் ஊற்றுவாயாக அமைந்து இருக்க லாம். துச்க உணர்வை வெளிப் படுத்தும் ஒப்பாரி தமிழ் இசை மரபிற் கேற்ப வியாகுல பிரசங்கம் அமைந் திருப்பதை அவதானிக்கலாம்.

➧ யுனைட்டட் பைபிள் சொசைட் டியின் அறிக்கை கடந்த ஆண்டில் 30 மொழிகளில் திரு விவிலியத்தின் பல பகுதிகள் மொழியாக்கம் செய் யப்பட்டதோடு மொத்தமாக 2197 மொழிகளில் திருவிவிலியத்தின் பகுதி கள் அச்சிடப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகின்றது. பழைய ஏற்பாடும் புதிய ஏபாடும் அடங்கிய முழுமை யான திருவிவிலியம் 388 மொழி களில் அச்சிடப்பட்டுள்ளதாகவும் உலகில் கிட்டத்தட்ட 6000 மேற் பட்ட மொழிகள் இருப்பதாகவும் அந்த அறிக்கை மேலும் குறிப்பிடு கிறது.

[8ம் பக்கம் பார்க்க]

### வினாக்கள்

1) அடமு என்ற எபிரேய சொல்லின் அர்த்தம் என்ன?
2) பசாம் நூலை யாக்கோமே கொன்சால்வேஸ் சுவாமிகள் எங்கு அறிமுகம் செய்தார்?
3) உலகில் கிட்டத்தட்ட எத்தனை மொழிகள் உண்டு?
4) நீக்ரோ அடிமைக் குழந்தைகளை விலைக்கு வாங்கி அவர்கட்கு சுதந்திர வாழ்வும் விசு வாச வாழ்வும் வழங்கி வரும் "புனித சூசையப்பரின் திராட்சைக் கொடி" சபையின் நிறுவ னர் யார்?
5) குவாடலுப்பேயில் தேவதாயின் காட்சிகளைப் பெற்றவர் யார்?
6) 20ம் நூற்றாண்டின் நடும்பகுதியில் உலகு எதிர்நோக்கும் பயங்கர பிரச்சினைகள் பற்றி தீர்க்கதரிசன வாக்குரைகள் கூறியவர் யார்?
7) அச்சுக்கலையை முதலில் கண்டுபிடித்தவர் யார்?
8) ஏழைக் கருப்பு நிறத்தவரின் அடிமை வாழ்வை அகற்ற தன் வாழ்நாள் முழுவதும் (பேச்சா லும், எழுத்தாலும் அயராது போராடிய முதல் ஐரோப்பியர் (ஸ்பானியர்) யார்?
9) ஐ. நா சபையால் வெளியிடப்படும் தமிழ் திங்கள் இதழின் பெயரென்ன?
10) யூபிலி ஆண்டை ஆரம்பித்து வைக்கும் போது எந்த ஆலயத்தின் விசேட கதவை (புனித கபாடம்) பாப்பரசர் முதலில் திறந்து வைக்கிறார்?

விடைகளை எதிர்வரும் 10ந் திகதிக்கு முன் அனுப்புக.

"தூயியும் தூளியும்"
வளன் ஆச்சிரமம்,
102, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# இந்தியாவில் சிலுவை சுமக்கும் கிறிஸ்து

சென்ற கிறிஸ்மஸ் விழாப் பூசைக்கு மக்கள் செல்லும்போதுதான் குஜராத் மாநிலத்தில் கிறிஸ்தவ கோவில்கள், வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. பலர் அடித்து உதைக்கப்பட்டனர், நையப்புடைக்கப்பட்டனர். (சரி நிகர் 1999 பெப்)

1999 தை 22, 23ம் நாட்களில் ஓரிஸ்ஸாவிலுள்ள மனோகார்புர் கிராமத்தில் குட்டரோகர்ட்கு பணியாக்றி வந்த கிராம் ஸ்ருவட் ஸ்ரேன்சுவும் (வயது 50) அவர் இரு குழந்தைகள் பிலிப் (10), திமோத்தி (7) யும் உயிருடன் நெருப்பு மூட்டிக் கொல்லப்பட்டனர். இக் குடும்பம் 1965 முதல் அங்கு பணியாற்றி வருகிறது.

சிறுபான்மையோருக்காக பணியாற்றி, பல துன்பமனுபவித்து அப்பணியின் போதே கொல்லப்பட்ட மகாத்மா காந்தியின் குஜராத் மாநிலத்திலேயே சிறுபான்மை மதத்தினருக்கெதிரான இந்த வன்செயல்கள் இடம்பெற்றுக் கொண்டே வருகின்றன. கடந்த ஆண்டில் இந்தியாவின் 25 மாநிலங்களில் சிறப்பாக 11 மாநிலங்களில் கிறிஸ்தவ மதத்தினருக்கெதிரான வன்முறைகள் இடம் பெற்றுள்ளதாக சில அறிக்கைகள் கூறுகின்றன.

கிறிஸ்தவர்கள் காரணம் எதுவுமின்றி கண்டபடி தாக்கப்படுவதும் கற்பழிக்கப்படுவதும், கொல்லப்படுவதும் அவர்களது வீடுகள், கடைகள், கோவில்கள், பாடசாலைகள் சேதமாக்கப்படுவதும் தீக்கிரையாக்கப்படுவதும் சாதாரண, நாளாந்த நிகழ்ச்சிகளாகியுள்ளன.

இவ் வன்முறைகட்கும் அக்கிரமங்கட்குமான பின்னணியை நோக்குமிடத்து P J P என்படும் மக்கள் ஜனதாக் கட்சி ஆட்சி வந்த பின்னரே இந்தியாவில் கிறிஸ்தவர்கட்கெதிராக வன்முறை பெரியளவில் அதிகரித்துள்ளன. 'இந்துத்துவம்' என்ற அரசியல், இந்திராகாந்தி காலத்தில் ஆரம்பமாகி ராஜீவ் காலத்தில் வளர்ந்து இன்று (P J P) பாரதிய ஜனதா கட்சியின் காலத்தில் தலை தூக்கி தாண்டவமாடுகிறது. இதற்கு R.S S என்ற பாசிஸ இயக்கத்தின் ஆதரவும் உண்டு. R.S.S. குழு நேரடியாக அரசியலில் ஈடுபடுவதில்லை. எனினும் நாட்டில் குழப்பங்களைத் தூண்டி விடும் வகுப்புவாத அமைப்புகட்கு வழிகாட்டி வருகிறது. நாதுரம் கோட்சே என்ற மகாத்மா காந்தியின் கொலைஞன் R.S.S. அமைப்பின் ஓர் முக்கிய உறுப்பினராக இருந்தவன்.

இவ் வன்முறைக் குழுக்களுள் விஸ்வஹிந்து பரிஷத் (V.H P) தின் இராணுவமாக செயற்படும் பஜ்ரங் தளம், குஜராத்திலும் ஓரிசாவிலும் கிறிஸ்தவர்கட்கு எதிரான கொலை, தீவைப்பு முதலியவற்றை முன்னணியில் நின்று நடத்துகிறது. 1986 88 காலசட்டத்தில் இக் குழு ஓரிசாவில் 30 கிறிஸ்தவ எதிர்ப்புக் கலவரங்களை மிக உக்கிரமாக நடத்தியிருக்கிறது இதில் ஸ்ரேன் கொலைக்கு காரணமாயிருந்தவன் எனக் கருதப்படும் தாராசிங்குக்கு எதிராக ஏற்கனவே 9 மனுக்கள், குற்றச்சாட்டுதல்கள் உண்டு.

1992ல் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டமைக்கு பாவிக்கப்பட்ட இக் காடையர் குழுவே, கிறிஸ்தவர்கட்கெதிராகவும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

முஸ்லிம்கட்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படும் போது கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று அவர்கள் பதிலடி கொடுக்க பழிவாங்கத் தவறுவதில்லை. ஆயுதங்கள் ஏந்தி, குண்டுகள் வீசி பதில் தாக்குதல்களை பொலிஸ், ராணுவம் தலையிடும் வரை நடத்துவார்கள்.

கிறிஸ்தவர்கள் அவ்விதம் பழி வாங்குவதில்லை. எனவே இளகின இரும்பைக் கொல்லன் அடித்தும் வளைத்தும் நிமிர்த்தியும் தன் விருப்பப்படி செய்வது போல, நிராயுத பாணிகளான இந்தியக் கிறிஸ்தவர்கட்கெதிராக இந்தியாவின் 11 மாநிலங்களில் வன்முறை வெறியாட்டம் செயற்படுகிறது.

வரப்போகும் மூன்றாம் மிலேனியத்தின் "ஒன்றே உலகு ஒன்றே மானிடம்" என்ற உலக மயமாக்கலில் தொடர்பு சாதனங்கள் (T.V. Internet முதலியன) ஏற்படுத்தும் மாயை மத்தியில் யதார்த்தமாக உலக செல்வங்களை அதன் பிடியில் வைத்துள்ள 2% பண முதலைகளும், அவற்றின் சுகபோகங்களை அனுபவிக்கும் இருபது வீதத்தினரை தவிர ஏனைய 75 % உலக ஜனக் கும்பல் பட்டினி வறுமை நிலைக்கு தள்ளி விடப்படுவர்.

இவ் வெகுசனக் கும்பலில் பலர், இவ்வேற்றத் தாழ்வுகளை சகிக்க முடியாமல் கொலை, கொள்ளை, விபச்சாரம், போதைப் பொருட் கடத்தல், ஆயுதக் கொலைக் கலாச்சாரக் கும்பல்களாக உருவாகி பழி தீர்ப்பர்.

இதன் ஒரு வடிவம் இந்தனேசியாவில் ஜனாதிபதி சுகாட்டே "தன் தேசத்தை சூறையாட, பட்டினிச் சாவை எதிர்நோக்கும் பலர் இனக் கலவரங்களையும், மதக் கலவரங்களையும் தூண்டி கொலை கொள்ளைகளைத் தாராளமாக புரிகின்றனர். (இந்தோனீசிய கிறிஸ்தவ எதிர்ப்பு விபரம் அடுத்த இதழில்) இந்த எதிர்ப்புகளின் இந்திய வடிவமே குஜராத், ஓரிசா கிறிஸ்தவர்கட்கு எதிரான கலவரங்கள்.

இதன் உலக மயமாக்கல் பின்னணி பல இந்திய கிராமங்களில் பிற்பட்ட சாதியினருக்கு எதிரான கொலைகளையும் தலித் எதிர்ப்புக் கொலைகளையும், வறுமையின் கோரத்தால் தம் உடலின் அங்கங்களையே விற்கும் (சத்திர சிகிச்சை மூலம்) கிராம மக்களையும் எயிட்சையும், நிலச்சுவாந்தார்களின் கொடுமைகளையும் உருவாக்கியுள்ளது.

இது இந்தியாவின் ஒரு பாரிய சமூக பொருளாதார பிரச்சினை. ஆதித் திருச்சபைக் காலத்தில் ரோமை மன்னன் நீரோ போன்று கிறிஸ்தவர்களைப் பலிக்கடாவாக்குபவர்கள் தம் வினையைப் பெருக்கி நித்திய கர்மச் சூழலிற்குள் தம்மைப் புதைக்கின்றனர். எனவே உலகமயப் பொருளாதாரம், சமூகப் பிரச்சினைகளைத் தோற்றுவித்து கலவரங்களுக்கு அடி கோலுகிறது.

ரோமை நகரின் சேரிப் பிரச்சினைகளை தீர்க்க வழி தெரியாது, அவற்றுக்கு தீயிட்டு சாம்பராக்கி விட்டு கிறிஸ்தவக் குருக்கள், மக்கள் மீது பழியைச் சுமத்தி கி. பி. 64ல் கிறிஸ்தவ எதிர்ப்புச் சட்டங்களை இயற்றினான். அவன் தொடங்கிய வேதகலாபனை, 300 வருடங்கள் வரை நீடித்தது கிறிஸ்தவர்கள் ஆயிரக் கணக்கில் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சிகளாக மரித்தாலும், கத்தோலிக்க திருச்சபை சுரங்களுள் வாழும் மறைந்த திருச்சபையாகி கி.பி. 313ல் வெற்றியுடன் வெளிவந்தது.

[ 8ம் பக்கம் பார்க்க]

# தேவதாயின் அற்புத வரலாறு [தொடர்ச்சி]

**யேசுக்கிறிஸ்து கல்வாரி மலைக்குப் போய் அவ்விடத்தில் மரணமடைந்த வரலாறு**

பிலாத்து என்பவன் அவர் சிலுவையிலே அறையுண்டு மரணமடையத் தீர்மானித்தவுடனே யூதர்கள் அவர் முன் அணிந்திருந்த ஆடையை அவருக்கு உடுத்தி பாரமான சிலுவையையும் அவரின் தோளின் மேல் ஏற்றிப் பாஸ்கா விழாவிற்கு அப்போது வந்திருந்த சனங்களுடைய கூட்டத்திற்கு நடுவே மகா மானபங்கமாக அவரை நடத்திக் கொண்டு போனார்கள். அவரை அறிந்தவர்கள் அழுதார்கள், அவரை அறியாதவர்கள் அவரைப் பார்த்து பரியாசம் பண்ணினார்கள். பதினொரு அப்போஸ்தலர்களிலே அர்ச். அருளப்பர் தவிர மற்றயாவரும் பதுங்கிக் கொண்டார்கள். அர்ச். அருளப்பர் தனது ஆண்டவர் இப்படியெல்லாம் வேதனைப்பட்டுப் பரியாசம் புண்ணப்படுகிறதைப் பார்த்து உயிர் பிரிந்ததுபோல விறைத்து நின்றார். மூன்று மரியம்மாட்களும் சோர்ந்து விழுந்தார்கள். தேவமாதா துன்பத்திலே மூழ்கியிருந்தாலும் திடனாக இருந்து இவர்களை தைரியப் படுத்தினாள். யேசுவினுடைய பாடுகளைப் பரம பிதாவுக்கு ஒப்புக் கொடுத்து உலக இரட்சணியத்துக்காக வேண்டிக்கொண்டாள் சம்மனசுக்களை ஏவி கடவுளைத் துதிக்கச் சொன்னாள்.

யேசு முன் இரத்தம் சிந்தின பலவீனத்தால் பாரமான பதினைந்தடிச் சிலுவையைத் தாங்க முடியாமல் பல முறை விழுந்தார். இந்த ஆழ்ந்த பரம இரகசியத்தையும் மனிதருடைய அறியாமையையும் கண்டு தேவமாதா தேம்பியழுதாள். அவருடைய பாடுகளின் வேதனைகளெல்லாம் இவளுக்கும் உண்டாகும். அவர் பாடுபடத் தொடங்கிய நேரம் முதல்கொண்டு சற்றும் இளைப்பாறாமலும் உறங்காமலும் சாப்பிடாமலும் துன்ப வேதனைகளை மாத்திரம் விரும்பிக் கொண்டிருந்தாள். யேசு இப்படியான பாடுகளைப் பட்டும் உயிரோடிருந்து சிலுவையைச் சுமக்கிறதைக் கண்ட லூசிப்பேய் இவர் தெய்வ பலத்தினால் மட்டுமே இவைகளைத் தாங்குகிறாரென்று கண்டு பயங்கொண்டு தன்னைச் சேர்ந்த பசாசுக்களோடு நரக பாதாளத்திற்கு ஓடிப் போகத் தீர்மானித்துக் கொண்டது. நித்திய பிதாவின் கட்டளைப்படி தேவமாதா தனக்குண்டான அதிகாரத்தைக் கொண்டு அதுகள் நரகத்துக்குப் போகாமல் யேசு மரிக்கும் வரை அவ்விடத்தில் இருக்கக் கட்டளையிட்டாள். அவை அக் கட்டளைக்கு அமைந்து நடுநடுங்கிக் கொண்டு யேசுவோடு கூடச் சென்றன. யேசுநாதர் பாரமான சிலுவையைச் சுமக்கத் தேவமாதாவின் உதவியை ஏற்கக் கூடாமையாயிருந்த படியினாலேயும் சம்மனசுக்களுடைய உதவியை அவர் ஏற்றுக் கொள்ள மனதில்லாமையாயிருந்தபடியினாலேயும் வேறு மனிதருடைய உதவியையாகிலும் ஏற்றுக்கொள்ள மிகவும் தாழ்ச்சியாய் வேண்டிக்கொண்டாள்.

யேசு வழியிலே சாகாமல் இருக்க சிரேனூர் சிமியோனை அவர் சிலுவையைச் சுமக்கத் துணையாக அமர்த்தத் தேவ சித்தப்படி அவர்களுக்கு அறிவு உண்டானது. யேசு சிலுவையைச் சுமந்து கொண்டு போகும் போது அநேக பெண்கள் அழுது கொண்டு போனார்கள். யேசுநாதர் அவர்களைப் பார்த்து, ஜெருசலேம் பட்டணத்து மக்களே நீங்கள் நமக்காக அழவேண்டாம், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்றார். யேசுநாதர் இரு பக்கத்திலும் சிலுவையைச் சுமந்து கொண்டு வரும் கள்ளர்களோடு கல்வாரி மலைக்கு வந்து சேர்ந்தார். இங்கே அவருடைய ஆடையை உரியும் போது தேவமாதா முழங்காலில் இருந்து அவர் கொடுக்கப் போகிற பலியை மனிதருடைய இரட்சணியத்துக்காகப் பரம பிதாவிற்கு ஒப்புக் கொடுத்தாள்.

அப்போது மத்தியான வேளையாயிருந்தது. அவரைச் சிலுவையிலறைய யூதர்கள் எத்தனித்த போது யேசுநாதர் மனுக்குலத்திற்காக வேண்டிக்கொண்டது போல தேவமாதாவும் வேண்டிக் கொண்டாள். யேசுவினுடைய திருக்கரங்களைச் சிலுவையிலறையும் போது தேவமாதா நெருங்கி கரங்களை முத்தம் செய்து வணங்கினாள். மூன்றாணிகளினால் அவரிரு கரங்களையும் கால்களையும் சேர்த்து அறையும் போது இரத்தம் ஆறாக ஓடியதுமன்றி அவர் வாக்கிற்கெட்டாத துன்பத்தை அனுபவித்தார். சிலுவையோடறைந்திருக்கப்பட்ட யேசுவைக் குப்புறக் கவிழ்த்துச் சிலுவை மேல் ஏறப் பாதகர்கள் எத்தனித்த போது அனேக சனங்கள் இரக்கத்தினால் ஓலமிட்டு அழுதார்கள். தேவமாதா வியாகுலத்தால் விம்மி பரமபிதாவை இப்படி நடக்கக் கூடாது என வேண்டிக்கொண்டாள். அவர் உத்தரவுப்படி சம்மனசுக்களுக்குக் கட்டளையிட்டு இப்படிச் செய்யாமல் நிறுத்தினாள். இரண்டு கள்வரையும் சிறையிலறைந்து யேசுநாதரை அறைந்திருந்த சிலுவையை நடுவிலும் கள்வரை அறைந்திருந்த சிலுவைகளை இரு பக்கத்திலும் நாட்டினார்கள்.

அப்போது தேவமாதா முழங்காலிலிருந்து யேசுநாதரை வணங்கினாள். இவருடைய மகிமைப் பிரதாபத்தைக் காட்டச் செய்ய பரம பிதாவை வேண்டிக் கொண்டாள். உடனே பூமி அதிர்ந்தது. சூரியனும், சந்திரனும் இருண்டன. பஞ்ச பூதங்கள் கலங்கின, மலைகள் பிளந்து போயின. தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்து போயிற்று, கல்லறைகள் திறக்கப்பட்டன. அப்போது யேசு திருவுளம் பற்றினதாவது, 'என் பிதாவே இவர்களுக்குப் பொறுத்தல் கொடும், இவர்கள் செய்வது என்னவென்று அறியாமல் இருக்கிறார்கள்''. இரு கள்வர்களிலொருவனான டிஸ்மா சென்பவன் தேவமாதாவின் வேண்டுதலினால் மனம் திரும்பி பாவத்திற்கு மனஸ்தாபப்பட்டழுது பொறுத்தலடைந்தான். யேசுநாதர் தேவமாதாவைப் பார்த்து அம்மா இதோ உமது மகன் என்று அருளப்பரைக் காட்டினார். பின் என் ஆத்துமத்தை உமது கரங்களில் ஒப்புக் கொடுக்கிறேன் என்று சொல்லி யேசு உயிர் துறந்தார். அப்போது தேவமாதா மரணமடையாமலிருந்தது ஒரு புதுமையாற்றான். லூசிப் பேய் மற்றப் பசாசுக்களோடு நரகத்தில் விழுந்துபோயிற்று. தேவமாதா அன்று மாலை வரை சிலுவையினடியிலேயே வேண்டிக்கொண்டிருந்தாள். யேசுநாதருடைய பாடுகளின் பலன்களை மனுக்குலத்துக்களிக்கத் தேவமாதா அதிகாரம் பெற்றாள்.

(வளரும்..)

## இந்தியாவில்...

(6ம் பக்கத் தொடர்)

நம் 3ம் மிலேனிய ஏற்றத்தாழ்வுகள் சமூகங்களைத் துண்டு போட்டு, ஒன்றுக்கொன்று எதிர் உணர்வுகளைத் தூண்டி விட இன்று பிறந்துள்ள சமயமய அடிப்படை வாதம் என்ற போர்வைக்குள் சாத்தான் புகுந்து பாரிய அழிவுகளைத் தோற்றுவிக்கலாம்.

அன்பு, காருண்ணியம், சகிப்புத் தன்மை போன்ற நற்பண்புகளின் தொட்டிலாக காலாதிகாலம் திகழ்ந்த ஓர் மண்ணும் மக்களும் — பகைமை, அரக்கத்தன்மை, சகியாமை முதலிய வற்றின் பிறப்பிடமாகலாம். இதுவே இன்று குஜிராத்திலும், ஒரிசாவிலும் நடப்பது. இதற்கு எதிராக சென்ற மாதம் பங்களூர் புனித சூசையப்பர் கல்லூரி மைதானத்தில் ஆயிரக் கணக்கில் எல்லா சபைக் கிறிஸ்தவர்களும் ஒன்று கூட ஒருநாள் உண்ணாவிரத செபத்தில் ஈடுபட்டனர், வரப்போகும் அந்தி கிறிஸ்து காலங்களில் விசுவாசத்தில் உறுதியாய் நிற்க எம்மைத் தயார் பண்ணுவோம் — செபம், தபம், பரித்தியாகத்தில்.

"நானோ நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் சிலுவையை அன்றி வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமைப்பட மாட்டேன்"

(கலா 6:14)

## இந்தியாவின் சிறுபான்மை...

(4ம் பக்கத் தொடர்)

வாதத்தை அளித்து விடுத்த அறிக்கையில் "இந்தியா (பாரதம்) பல இன, மத மக்கள் ஒருங்கிணைந்து வாழும் நாடு. என்றும் எல்லா இன, மத கலாச்சாரமும் ஆட்சிப் பீடத்தால் பேணிக்காக்கப்படுவதே பாரதத்தின் மிகப் பெரிய பண்பு என்றும் இதனை தமது அரசாங்கம் கண்டிப்பாக அமுல் நடத்தியே தீரும் எனவும் குறிப்பிட்டார்.

எனினும் அவரது நடவடிக்கைகளின் பின்னும் கிறிஸ்மஸ் தினத்தில் குஜராத் மாநிலத்தில் பத்துப் பாரிய பயங்கர வன்முறைச் செயல்கள் நடந்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆகவே வெளிநாடுகளிலுமிருந்து இந்திய அரசுக்கு, குஜராத் வன்முறைகளை அடக்க கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென கடிதங்கள் அனுப்பும் இயக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## தூவியும் துளி...

(5ம் பக்கத்தொடர்)

- திருச்சபை ஞான அதிகாரிகளோடு கருத்து வேறுபாடு ஏற்பட்டால் அதை வெளியில் சொல்லலாம். ஆனால் அதற்காக திருச்சபையைவிட்டு வெளியேறக் கூடாது என் திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் அஸ்ரியாவுககு மேற்கொண்ட மூன்று நாள் பயணத்தின் போது சால்ஸ்புர்க் பேராலயத்தில் ஆற்றிய மறையுரையில் சொன்னார்.

- பெண் கல்வியின் அவசியத்தை உணர்ந்து திருமதி ஆன் பிலேகன் தன் மகளின் உதவியுடனும் ஆயர் பெற்றக்கினியின் ஆசியுடனும் பெண்களுக்கான கல்விக்கூடம் 1845ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டது.

- சிலுவைப்பாதை தியானம் தபசு காலத்தில் சிறப்பான இடத்தை பெறுகின்றது. யேசு சிலுவை சுமந்த பாதையூடாக யாத்திரை மேற்கொண்டதாக வரலாறு கூறும்.

### சென்றமாத வினாக்களுக்கான சரியான பூரணமான விடைகள்

1) வுல் கொத்தா
2) தமிழிழ் சமஸ்கிருதத்தை கலந்து எழுதும் நடை
3) ஆறுமுகநாவலர்
4) முத்திப் பேறுபெற்ற சிப்பிரியான் மிக்கல் இவேனேர்ன்சி
5) வண. கோபி
6) புனித மாட்டீன் தே போரஸ்
7) முதலாம் அருள் சின்னப்பர்; அல்பேட்டோ லூசியானி
8) சாங்கோபாங்க சுவாமிகள் எனப்படும் யாக்கோகோமே கொன்சலஸ் அடிகள்

### எட்டு வினாக்களுக்கும் சரியான விடைகளை அனுப்பி பரிசு பெறுபவர்

- ப. க. அனிஸ்ரா லொறெற் 73, கதீட்ரல் வீதி, யாழ்ப்பாணம்.

### இரண்டாவதாக வருபவர்

- செ. ஜெடின், உயரப்புலம், ஆனைக்கோட்டை.

### மூன்றாவதாக வருபவர்

- இ. காமலீற்றா 115, பாங்சால் வீதி, யாழ்.
- சோபனா லீனஸ் 488, சென் மேரிஸ் லேன், மட்டக்குளி, கொழும்பு 15

### சிறு தவறுகளுடன் சரியான விடைகளை எழுதியவர்கள்

சகாயநாதன் மரியா குருநர், அ. றொகானா அஸ்வினி யாழ், றஞ்சினி சூசைப்பிள்ளை யாழ், கிறிஸ்ரின் அல்பேட் கொய்யாத் தோட்டம்.

## யூபிலிகளும்...

(1ம் பக்கத் தொடர்)

ளின் ஏதேன் சிங்காரவனம் போன்றும், வேறு சிலருக்கு எல்லா நவீன லௌகீக வசதிகளையும் கொண்ட சிற்றின்பவனமாகவும், பெரும்பான்மையினருக்கு நரகம், வேதனைகள் ஆரம்பிக்கும் சபிக்கப்பட்ட பூமியின் பாலைவனமாகவும் தோன்றுகிறது.

இதை அருளின் காலமாகவும் தந்தையின் வெற்றி வாகை இல்லத்திற்கு திரும்பிகின்ற காலமாகவும் அமையும்படி செய்ய இவ்வருடத்தில் தினமும் செபிக்கப் போகிறோம். பிதாவின் கரத்தில் நாளாந்தம் தங்கி வாழும் ஏழ்மை வாழ்வுக்கு முயற்சி, உலகப் பொருள் ஈர்ப்பில் இருந்து அகன்று —

"நீதியின் வழியில் எல்லோருக்கும் கைவிடப்பட்டோருக்கும் அன் காட்டும் திருச்சபையாக சான்று பகரச் செய்தருளும்" என்பது திருச்சபையின் 1999ம் ஆண்டுச் செபம். இது வெறும் செபம் அல்ல ஓர் நம்பிக்கை தரும் செயற்பாட்டின் ஆரம்பம்,

Print: "ANNAI PRINTERS" Jaffna.

Published by: PAX CHRISTI St. JOSEPHS ASARAM, 102, Main Street, Jaffna.

விலை ரூபா 2.00